DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

Case No. CC 395/2022

Prosecution Witness PW5

| | | | |
|---|---|---|---|
| Name | : மதிவண்ணன் | Caste | : |
| Father's Name/ Husband's Name | : த/பெ. சுந்தர்ராஜ் | Calling | : |
| Village | : | Religion | : இந்து |
| Taluk | : கிணத்துக்கடவு | Age | : 60 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 23th day of November 2025.

(Accused present)

முதல் விசாரணை :

1. நான் தற்போது கிணத்துக்கடவு காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். எனக்கு முன்பு பணியாற்றிய உதவி ஆய்வாளர் திரு சந்தான கருப்பசாமி அவருடைய கையெழுத்து மற்றும் கையொப்பம் நன்றாக எனக்குத் தெரியும் வழக்கு கோப்பின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன். கடந்த 30.12.2019 20.00 மணியளவில் உதவி ஆய்வாளர் அவர்கள் நிலைய அலுவலில் இருந்த போது அசா 1 நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினைப் பெற்று நிலைய குற்ற எண் 208/19 சட்டப்பிரிவுகள் 279, 338, 304(A) IPC படி வழக்குப் பதிவு செய்துள்ளார். (முதல் தகவல் அறிக்கை **அசாஆ 2** ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது).

2. பின்னர் ஆய்வாளர் அவர்கள் சம்பவ இடம் சென்று 7.30 மணியளவில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு கருப்பசாமி, காளிச்சாமி ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பார்வை மகஜர் **அசாஆ 3** மற்றும் மாதிரி வரைபடம் **அசாஆ 4** ஆவணங்களாக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் 1 முதல் 11 வரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கில் இறந்து போன வேலுமணி என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு 30.12.2019 ம் தேதி அனுப்பி வைத்துள்ளார்.

3. சம்மந்தப்பட்ட எதிரியை தேடி வந்த நிலையில் காவல் நிலையத்தில் ஆஜரான எதிரியை கைது செய்தும் தக்க பாதுகாப்பில் விடப்பட்டுள்ளது. இவ்வழக்கில் புலன் விசாரணை மேற்கொண்டு விபத்தை ஏற்படுத்திய வாகனம் TN 37 BZ 6130 ASHOK LEYLAND ஐ 02.01.2020 ம் தேதி மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தி மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றுள்ளார், (மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அசாஆ 5** ஆவணமாக ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது). அன்றைய தினமே வாதி ஓட்டி வந்த TN 38 AD 4551 TVS XL SCOOTER ஐ மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தி மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றுள்ளார். ( மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அசாஆ 6** ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது.

4. பின்னர் இவ்வழக்கில் இறந்துபோனவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும் பிரேத பரிசோதனை சான்று பெற்றுள்ளார்( பிரேத பரிசோதனை சான்று **அசாஆ 7** ஆவணமான குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கில் புலன் விசாரணையை முடித்து எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:இல்லை

அசா 1 கொடுத்த புகாரை சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரியின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து வழக்கிற்கேற்ப தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/J.Saravanakumar)
Judicial Magistrate No.I,
Pollachi.